முருகப்பெருமான் துணை

# மகான் திருமழிசை ஆழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.11.2023,** புதன்கிழமை

1. ஞானிகள் புடை சூழ்ந்த
ஞான சபை படைத்து
ஞானிகள் பூசை வழிபாடு
ஞாலமதில் செய்து அருளுகின்ற
2. அருளுகின்ற ஆறுமுக அரங்கனே
அகிலமதில் உன் பெருமை கூறி
வரமென அறிவுரை ஆசிதனை
வழங்குவேன் சோபகிருது தேள் திங்கள்
3. திங்களிலே சஷ்டிதிகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 06 ம் நாள், 22.11.2023, புதன்கிழமை)
திருமாழிசை ஆழ்வாரும் உரைப்பேன்
ஓங்கார ஞான உலகம் அமைய
ஓதிடுவேன் உலகோர் தேறிவர
4. தேறிவர தெய்வ நெறிவழி
தேசிகன் காட்டும் சன்மார்க்க
அறநெறி கடைபிடிக்க வேணும்
அளவிலா சக்திமிகு அன்னதான
5. அன்னதான சேவை தன்னில்
ஆற்றல்பட பங்களிப்பு செய்து
மண்ணுலகில் தருமம் வளர
மகத்துவம்பட தொண்டாற்றி
6. ஆற்றியே புண்ணிய பலமெனும்
அடையாளம் கொண்டு இருக்க
ஆற்றல் கூடி கலியுகத்தில்
அரங்கன் வழி உலக மக்கள்

7. மக்களெல்லாம் தருமவான்களாக
மகான்கள் ஆசி அனுகூலம்
தேக்கமின்றி பெற்றவர்களாகவே
தேறியே உலகமாற்றம் நிகழ்த்தும்
8. நிகழ்த்தும் சக்திபலம் அடைவர்
நிலமதனில் கலியால் தொடரும்
வகைபடா தீவினைகள் தனை
வளரவிடா விரட்டி நின்று
9. விரட்டியே நீதி நெறிபட வாழ
விரைந்து தரும ஞான பலமான
அறம் நிறைந்த தலைமைதனை
அமைக்கும் மகாசக்திகளாக மாறுவர்
10. மாறவே அரங்கன் ஞானம்
மண்ணுலகில் இந்தவித காலம்
ஆறுதலாக வழிகாட்டலாக இருக்க
அனுகியே பிரணவக்குடிலாம் ஞானசபைக்கு
11. ஞானசபைக்கு அனைவரும் வர
நல்லாட்சி ஞான ஆட்சிதனை
தானாக அமைக்கும் பெருமாற்றம்
தவராஜனால் அரங்கேறுமப்பா

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—